தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க் கிழமை, 1981 மே 5.

சித்திரை 23, துன்மதி-திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
என நான்கே ஏமம் படைக்கு.''

வீரம், மானம், சிறந்த வழியில் நடக்கும் நடக்கை, தலைவரால் நம்பித் தெளியப்படுதல் ஆகிய நான்கு பண்புகளும் படைக்குச் சிறந்தவையாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

1979 ஆம் ஆண்டில் மின்வாரியம் நடத்திய நேரடித் தேர்வு.

*வினா எண் 967 திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக மின் வாரியத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதியினருக்கு வேலை தருவதற்காக 1979ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற நேரடித் தேர்வின் முடிவுகள் அறிவிக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன்: இதுவரை 62 பேர்களுக்கு வேலை நியமன உத்தரவுகள் அனுப்பப்பட்டுவிட்டன.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இதுவரையில் குறிப்பிட்ட நபர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்கள். ஆனால் கிட்டத்தட்ட 500-க்கு மேற்பட்டவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று முன்பு குறிப்பிடப்பட்டது. அந்தத் துறையிலே தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய ரிசர்வேஷன் கொடுக்கப்படவில்லையா? அமைச்ச

ரவர்கள் முன்பு சபையிலே தெரிவிக்கின்றபோது 130 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படி யானால் அதன்படி ஏன் கொடுக்கப்படவில்லை? மின் துறையிலே தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய சதவீதம் கொடுக்கப் படவில்லை என்றால் ஏன் இவ்வாறு குறைந்த நபர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது? தகுதி பெற்றவர்கள் இருந்தும் ஏன் கொடுக்கப்படவில்லை, அதிலே ஏற்படும் காலதாமதத்திற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன்: தலைவர் அவர்களே, சென்ற முறை 140 பேர்களுக்கு வேலை தரப்படும் என்று சொன்னேன். அவர்களில் 62 பேர்களுக்கு உத்தரவுகள் அனுப்பப் பட்டுள்ளன. மீதி 78 பேர்களுக்கும் உத்தரவுகள் அனுப்பப்படும். ஆனால் அந்தத் துறையிலே மீதிப்பேர்களுக்கும் ஏன் வேலை கொடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். வேலைக்கு இடம் காலியில்லாததால்தான் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திலே ஏற்கனவே பணியாளர்கள் சர்ப் ளஸ்ஸாக, இந்தக் குறிப்பிட்ட தேர்வினை நடத்துவதற்கு முன்பு இருந்தார்கள் என்பது உண்மையா? அப்படி இருந்தும் அந்த நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது, பின்னர் எந்த அடிப்படை யிலே அந்த சிக்கல் நிவர்த்தி செய்யப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர் களே, இத்தகைய நியமனங்கள் பற்றி எல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்கு வருவதில்லை. இது மின்வாரியமே செய்யக்கூடிய காரியமாகும். 1980ஆம் ஆண்டு 265 இளநிலை உதவியாளர்கள், 45 காசாளர்கள், 60 பண்டகசாலைக் காப்பாளர்கள் ஆகி யோருக்கான பதவிகள் காலியாகும் என்று எதிர்பார்த்து வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு பட்டியலை அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள். ஆனால் தொழிலாளர்களோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே ஏற்கெனவே இருப்பவர்களுக்கு பணிகள் பகிர்ந்து அளிக்கப்பட்டபின் இன்றைக்கு என்ன நிலைமை ஏற்பட்டது என்றால் ஏற்கெனவே பணியாற்றியவர்கள் சர்ப்ளஸ் ஆக ஆகிவிட்டார்கள். அதாவது கூடுதலாக ஆகிவிட் டார்கள். 680 இளநிலை உதவியாளர்களும், 100 காசாளர்களும் உபரியாக ஆகிவிட்டார்கள். ஆகவே பண்டகசாலை காப்பாளர் கள் என்ற இரண்டாம் நிலைப் பதவிகள் காலியாக இருந்தன. அந்த இடங்கள்தான் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 140 பேர்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகின்றன.

1981 மே 5]

திரு. எல். இளையபெருமாள் :—தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 265 இளநிலை உதவியாளர்கள், 45 காசாளர்கள், 60 பண்டகசாலைக் காப்பாளர்கள் பதவி காலியாகும் என்று எதிர்பார்த்ததாகச் சொன்னார்கள். ஆனால் அந்த மின்வாரியத்திலே ஆரம்ப காலத்திலிருந்தே தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய 18 சதவீதம் கொடுக்கப்படாமல் இருக்கின்றது என்பது உண்மைதானா? தேர்வு காலங்களிலே அந்த மின்வாரியம், அரசாங்கம் அனுப்பிய உத்தரவினை அலட்சியம் செய்ததின் விளைவாக அவ்வாறு தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்காமல் இருக்கின்றது என்பது உண்மையா? குறிப்பிட்ட தகுதி வாய்ந்த மாணவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் வந்திருந்தும் அந்தப் பதவிகள் இதுவரையில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஆரம்பக் காலம் எது என்பது எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை கிறிஸ்து பிறந்தது முதற்கொண்டு கேட்கிறார்களோ என்பதும் புரியவில்லை. ஆனால் இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு தாழ்த்தப்பட்டவர்களுக்கு அங்கே போதிய சதவீதம் வேண்டும் என்ற அடிப்படையிலே காலியாகின்ற இடங்களில் 100-க்கு 100 தாழ்த்தப்பட்டவர்களுக்குத்தான் கொடுத்து வருகிறார்கள். ஆகவே ரிசர்வேஷன் என்பதில் பிரச்சினை ஒன்றுமில்லை. மொத்தத்திலே ஒரு இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அதிலே 18,000 பேர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்களா என்று கேட்பார்களானால் அந்த விவரம் என்னிடத்திலே இல்லை. அப்படி வராததற்குக் காரணம் ஆரம்ப காலம் என்று தாங்கள் எதைக் கருதுகிறீர்களோ, அதிலேயிருந்து தான் இது வரும்.

திரு. கோவைத்தம்பி :—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மற்றும் மலை ஜாதியினருக்கு வேலை வாய்ப்பு தருவதில் எதிர்கால நடவடிக்கைகளில் ஏதாவது மாற்றம் செய்து மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு ஏதாவது உத்தரவு அனுப்பியிருக்கிறதா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :—தலைவர் அவர்களே, அப்படி அனுப்பி இருந்தாலும் என்னுடைய துறைக்கு அனுப்பமாட்டார்கள்.